අග්‍රාමාත්‍ය කාර්යාලය

பிரதம அமைச்சர் அலுவலகம்

Prime Minister's Office



# කාර්යසාධන වාර්තාව

# செயற்திறன் அறிக்கை

# Performance Report

# 2014

# எமது நோக்கு

“சுயாதீன,இறைமையுள்ள மற்றும் சௌபாக்கியமிக்கதோர் இலங்கை”

# எமது செயற்பணி

“இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டும் அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களிடையே சிறந்ததோர் ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச இயந்திரமொன்றிற்காக தேவையான சிறந்த தலைமைத்துவத்தை வழங்குதல்”

# உள்ளடக்கம்


1 கடமைகள் மற்றும் அலுவல்கள்
2 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு
3 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு
4 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பதவியணிகள்
5 நடைமுறைப்படுத்திய விஷேட திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்

i. மஹிந்த சிந்தனை தொலை நோக்கு தேசிய கொள்கையுடன் இணைந்த வகையில் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ''பொருளாதார அபிவிருத்தியுடன் உயர் பண்புமிக்க சமூகமொன்றின் நிமித்தம் இலங்கை மக்களிடையே நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்''

ii. 2008 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற உற்பத்தித் திறன் அபிவிருத்தித் திட்டம்

iii. ''தேசத்திற்கு மகுடம்'' அபிவிருத்திக் கண்காட்சியுடன் இணையான வகையில் நடைபெறும் நிகழ்ச்சித் திட்டம்

iv. 2008 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் பிரஜைகள் - சேவை பெறுநர் பட்டயம் ஊடாக சமூக சேவைகள் சம்பந்தமாக அறிவுறுத்தல் மற்றும் சேவை வழங்கலை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்

v. 2008 – 2015 சார்க் சமூக பட்டயம் சம்பந்தப்பட்ட நடைமுறைத் திட்டத்தினை ஒருங்கிணைத்தல்


6 கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப்பயணம், இராஜதந்திரிகளுடனான சந்திப்பு, கலந்துரையாடல்கள் மற்றும் விசேட உள்நாட்டு வைபவங்கள்.
7 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு மாநாடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், புலமைப்பரிசில்கள் என்பவற்றுக்காக நாட்டில் இருந்து வெளியே செல்வதற்கான அனுமதியை வழங்குதல்
8 அமைச்சரவை நிருபம்,பாராளுமன்ற அறிக்கை மற்றும் சட்ட மூலங்கள் தயாரித்தல், முன்வைத்தல் மற்றும் பாராளுமன்ற வினாக்களுக்கு பதில் அளித்தல்
9 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் என்பவற்றின் விருத்தி
10 புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் மற்றும் அதன் கூரையில் சூரிய கலத் தொகுதியை அமைத்து சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்.
11 மனித வள அபிவிருத்தி
12 2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான செலவு சம்பந்தமான அறிக்கை
13 செயல் திட்டம் - 2015

# 1) கடமைகள் மற்றும் அலுவல்கள்

பிரதம அமைச்சர் அலுவலகம் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கௌரவ பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ அலுவல்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாகும். அதனூடாக நடைபெறும் அலுவல்களை கீழ் கண்டவாறு வகைப்படுத்தலாம்.

- இலங்கையின் அரச சேவையில் இரண்டாவது அலுவலகம் என்ற முறையில் மற்றைய எல்லா அரச நிறுவனங்களுக்கும் தேவையான வழிகாட்டலினைப் பெற்றுக் கொடுத்தல்
- கௌரவ பிரதமர் தலைமை வகிக்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்கல் மற்றும் ஒருங்கிணைப்பு.
- சகல அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றை ஒருங்கிணைத்து மக்களுக்கு சிறந்த சேவையொன்றினை வழங்குதல்.
- கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் வெளிநாட்டு தூதுக் குழுக்கள் வெளிநாட்டு தூதுவராலய அதிகாரிகளுடன் கலந்தரையாடல்களை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- பாராளுமன்ற வினாக்களுக்கு பதிலளித்தல், அரசாங்க கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையாக ஒத்துழைத்தல்.
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் முன்வைக்கப்படுகின்ற பாராளுமன்ற சட்டமூலங்களுடன் தொடர்புடைய விடயங்களை மேற்கொள்ளல்.
- சார்க் சமூக பட்டயத்தின் செயற்பாடு சம்பந்தமான நடவடிக்கையை ஒழுங்குபடுத்தல் மற்றும் பின்னூட்டல் பணிகள்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு கௌரவ பிரதம அமைச்சரின் அனுமதியினைப் பெற்றுக் கொடுத்தல்.
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் தொடர்பான அலுவல்களின் ஒருங்கிணைப்பும் வழிநடாத்தல்.
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் அரச மற்றும் தேசிய விழாக்கள் மற்றும் விசேட சந்தர்ப்பங்களில் ஊடக வசதிகளை ஏற்படுத்தல்.
- பிரதம அமைச்சர் அலுவலகத்துடன் தொடர்புடைய நிருவாக மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.
- பிரதம அமைச்சர் அலுவலகம், பிரதம அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் மற்றும் ஓய்வு விடுதி என்பவற்றின் பராமரிப்புப் பணிகள்.
- பலதரப்பட்ட சமூக உபசரணை சேவைகளுக்குத் தேவையான பங்களிப்பினைப் பெற்றுக்கொடுத்தல்.
- பொருளாதார அபிவிருத்தியுடன் உயர் பண்புமிக்க சமூகமொன்றின் நிமித்தம் இலங்கை மக்களிடையே நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

# Organizational Chart of Prime Minister's Office



**3) பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிருவாக கட்டமைப்பு**

- கௌரவ பிரதம அமைச்சரின் அலுவலகம்
- பிரதம அமைச்சரின் பிரத்தியேகப் பதவியணி
- பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம்
- மேலதிக செயலாளர் அலுவலகம்
- நிருவாகப் பிரிவு
- நிதிப் பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- ஊடகப் பிரிவு
- வழங்கல் மற்றும் களஞ்சியப் பிரிவு
- போக்குவரத்துப் பிரிவு
- பாதுகாப்புப் பிரிவு

# 4)பிரதம அமைச்சர் அலுவலகம் - பதவியணி விபரம்
## நிரந்தரப் பதவியணி
## 2014.01.01 – 2014.12.31

| இலக்கம் | பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போது இருக்குந் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | பிரதமரின் செயலாளர் | 1 | 1 | 0 |
| 2 | மேலதிக செயலாளர் | 1 | 1 | 0 |
| 3 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 2 | 2 | 0 |
| 4 | உதவிச் செயலாளர் | 7 | 4 | 3 |
| 5 | பிரதம கணக்காளர் | 1 | 1 | 0 |
| 6 | கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு) | 1 | 0 | 1 |
| 7 | உதவி/பிரதி பணிப்பாளர் (இ.திசே.) | 1 | 1 | 0 |
| 8 | நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 9 | மொழி பெயர்ப்பாளர் | 2 | 2 | 0 |
| 10 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 1 | 1 | 0 |
| 11 | ஆவணப் பொறுப்பு அலுவலர் | 1 | 0 | 1 |
| 12 | ஒழுங்கு மரபு அலுவலர் | 1 | 1 | 0 |
| 13 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 42 | 42 | 0 |
| 14 | தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் | 1 | 1 | 0 |
| 15 | தொலைக்காட்சி தொழில்நுட்பவியலாளர் | 1 | 0 | 1 |
| 16 | வரவேற்பாளர் | 1 | 0 | 1 |
| 17 | புத்தகம் கட்டுபவர் | 1 | 1 | 0 |
| 18 | தொலைபேசி ஊழியர் | 2 | 2 | 0 |
| 19 | தொலைக்காட்சி சேவை உதவியாளர் | 2 | 2 | 0 |
| 20 | வாகன சாரதி | 26 | 24 | 2 |
| 21 | தலைமை அலுவலக விடய உதவியாளர் | 1 | 1 | 0 |
| 22 | அலுவலக ஊழியர் சேவை | 34 | 31 | 3 |
| | **மொத்தம்** | 131 | 119 | 12 |

# பிரத்தயேகப் பதவியணி
# 2014.01.01 – 2014.12.31

| இலக்கம் | பதவிப் பெயர் | அனுமதிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போது இருக்கும் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | பிரத்தியேகச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 2 | மக்கள் தொடர்பு செயலாளர் | 1 | 1 | 0 |
| 3 | இணைப்புச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 4 | ஊடக செயலாளர் | 1 | 1 | 0 |
| 5 | இணைப்புச் செயலாளர் (தொழிற்சங்கம்) | 1 | 1 | 0 |
| 6 | இணைப்புச் செயலாளர் (பாராளுமன்ற விவகாரம்) | 1 | 1 | 0 |
| 7 | அந்தரங்க உதவியாளர் | 1 | 1 | 0 |
| 8 | சுருக்கெழுத்தாளர்(ஆங்கிலம்/தமிழ்) | 2 | 2 | 0 |
| 9 | சுருக்கெழுத்தாளர்(சிங்களம்) | 2 | 2 | 0 |
| 10 | தட்டெழுத்தாளர்(சிங்களம்) | 3 | 3 | 0 |
| 11 | தட்தெழுத்தாளர்(ஆங்கிலம்) | 2 | 2 | 0 |
| 12 | எழுதுவினைஞர் | 9 | 9 | 0 |
| 13 | சாரதி | 9 | 9 | 0 |
| 14 | அலுவலக விடய உதவியாளர் | 4 | 4 | 0 |
| | **மொத்தம்** | **38** | **38** | **0** |

# தற்காலிகப் பதவியணி

## 2014.01.01 – 2014.12.31

| இலக்கம் | பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போது இருக்கும் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | ஆலோசகர் (வெளிநாட்டு விவகாரம்) | 1 | 1 | 0 |
| 2 | ஆலோசகர் (கௌரவ பிரதமர் மற்றும் புத்தசாசன அமைச்சர்) | 1 | 0 | 1 |
| 3 | பிரதம அமைச்சரின் செயலாளரது இணைப்புச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 4 | அலரி மாளிகையின் முகாமையாளர் | 1 | 0 | 1 |
| 5 | சமூக உதவியாளர் | 1 | 1 | 0 |
| 6 | அந்தரங்கப் பாதுகாவலர் | 5 | 5 | 0 |
| 7 | செய்தி அலுவலர் | 1 | 1 | 0 |
| 8 | ஊடக இணைப்பாளர் | 1 | 1 | 0 |
| 9 | செய்திப் பதிப்பாசிரியர் | 2 | 2 | 0 |
| 10 | புகைப்படப்பிடிப்பாளர் | 1 | 1 | 0 |
| 11 | சமையற்கலை ஆலோசகர்(அலரி மாளிகை) | 1 | 0 | 1 |
| 12 | தலைமைச் சமையற்காரர் | 1 | 1 | 0 |
| 13 | பங்களா பொறுப்பாளர் | 3 | 3 | 0 |
| 14 | உதவி பங்களா பொறுப்பாளர் | 2 | 2 | 0 |
| 15 | சமையற்காரர் (நுவரெலியா) | 1 | 1 | 0 |
| 16 | உத்தியோகபூர்வ இல்ல உதவியாளர் | 8 | 8 | 0 |
| 17 | வீட்டுப் பணியாளர் | 2 | 2 | 0 |
| 18 | உபசரிப்பு விவகார,கட்டட பராமரிப்பு பொறுப்பாளர் | 1 | 1 | 0 |
| 19 | வாகனம் கழுபுபவர் | 2 | 2 | 0 |
| | **மொத்தம்** | 36 | 33 | 3 |

# 5) நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

**(i) "மஹிந்த சிந்தனை தொலைநோக்கு" தேசிய கொள்கைத் திட்டத்துடன் சமாந்தரமான வகையில் கௌரவ பிரதம அமைச்சரின் எண்ணக்கருவின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார அபிவிருத்தியுடன் உயர்பண்பு மிக்க சமூகமொன்றின் நிமித்தம் இலங்கை மக்களிடையே நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்.**

**அறிமுகம்**

மஹிந்த சிந்தனை தொலைநோக்கில் கூறப்பட்டதன் பிரகாரம் இலங்கையை ஆசியாவின் புதுமையாக மாற்றும் அடிப்படை எண்ணக்கருவுக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்திக்கான தேவையும் நிலவுகின்றது. அதற்குத் துணைபுரியும் வகையில் பொருளாதார அபிவிருத்தியுடன் உயர்பண்புமிக்க சமூகமொன்றின் நிமித்தம் இலங்கை மக்களிடையே நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, பல்வேறு தொனிப்பொருள்களில் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**எண்ணக்கரு**

மஹிந்த சிந்தனை தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மனிதனை பௌதீக ரீதியாக மட்டுமன்றி, ஆன்மீக ரீதியாகவும் கட்டியெழுப்புவதற்காக பக்தியுடன் அறிவு ஞானத்தையும் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இதற்காக பெற்றோர் – பிள்ளைகள், கணவன் - மனைவி, ஆசிரியர் – மாணவர், முதலாளி – தொழிலாளி, நிர்வாகி – நிர்வகிக்கப்படுபவர் போன்ற சகல தொடர்புகளையும் சிறந்த மற்றும் பயனுடையவைகளாக மாற்றி விரக்தி மற்றும் நம்பிக்கையின்மை என்பவற்றை உள்ளத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும். அதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியுடன் இணைவான வகையில் சமூக அபிவிருத்தியினையும் ஏற்படுத்தி பாதுகாப்பான சமூகமொன்றினை இந்த நாட்டினுள் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள்**

1. தேசப்பற்றுமிக்க உணர்வுகளைக் கட்டியெழுப்புதல்
2. சூழலை நேசித்துச் செயற்படல்
3. சுய ஒழுக்கமுள்ள சமூகமொன்றைத் தோற்றுவித்தல்


## நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்

- தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி – 2014 உடன் இணையான வகையில் குருநாகல் மாவட்டத்தின் பிரதேச செயலக மற்றும் மாவட்ட மட்டத்தில் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கிடையில் நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்தல் என்ற கருப்பொருளில் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டி நடாத்தப்பட்டதுடன் தேசத்திற்கு மகுடம் நிறைவு வைபவத்தின்போது அதில் வெற்றி பெற்றவர்களுக்கு வெகு விமரிசையான முறையில் பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.



தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி – 2014 நிறைவு வைபவத்தின்போது வெற்றி பெற்ற மாணவன் ஒருவனுக்கு கௌரவ தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய மற்றும் பிரதம அமைச்சரின் செயலாளர் பரிசில் வழங்கி வைப்பதைக் காணலாம்.

- நல்லதோர் உள்ளம் - பலமிக்கதோர் நாடு'' எனும் கருப்பொருளை மையமாக வைத்து பிரதம அமைச்சர் அலுவலகத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படும் நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறுவர்களிடையே நற்பண்புகளை விருத்தி செய்துகொள்வது சம்பந்தமான அறிவு மற்றும் தெளிவினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சிறப்பானதொரு வளர்ந்தோர் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும் ஒழுக்கமிக்க சிறப்பான பிள்ளைப் பருவத்துக்கான ஆலோசனைகளை வழங்கும் சிறுவர்களுக்கான சிங்கள மொழி நூலான ''தோத்த புரா ஒவதன் மல்'' எனும் சிங்கள் மொழி சிறுவர் நூல் பிரசித்தி பெற்ற எழுத்தாளரும் ஓவியருமான சிபில் வெத்தசிங்ஹ அவர்களினால் ஆக்கப்பட்டுள்ளது. சரோஜினிதேவி அருணாச்சலம் அவர்களால் அந்த நூல் ''அறிவு மலர் அஞ்சலி'' எனும் பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.




➢ ‘‘நல்லதோர் உள்ளம் - பலமிக்கதோர் நாடு’’ எனும் கருப்பொருளை மையமாக வைத்து அனுபவமிக்க எழுத்தாளர் சோமவீர சேனாநாயக்க அவர்களினால் எழுதப்பட்ட புத்தகத்தின் முதற் பதிப்பை சகல அரசாங்கப் பாடசாலைகளுக்கும் இலவசமாக பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.




➢ சோமவீர சேனாநாயக்க அவர்களினால் சிங்கள மொழியில் எழுதப்பட்ட ‘‘யஹபத் சித்தக் - சவிமத் ரட்டக்’’ எனும் நூல் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் சிங்கள – தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஏ.எஸ்.எம்.ஜிப்ரி அவர்களால் ‘‘நல்லதோர் உள்ளம் - பலமிக்கதோர் நாடு’’ எனும் எனும் பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டு நாட்டின் அனைத்து தமிழ்மொழிப் பாடசாலைகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த நூல் பூபாலசிங்கம் புத்தகசாலை ஊடாக விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

- பத்திரிகை ‘‘கார்ட்டூன்’’ கலையில் புதியதொரு திருப்பத்தினை ஏற்படுத்தி கார்ட்டூன் மூலம் சமூகத்தில் சிறந்ததொரு மாற்றத்தினை ஏற்படுத்தும் நோக்கில் சிறு பிள்ளைகளிடையே நற்பண்புகளை வளர்ப்பதற்காக விஜய பத்திரிகையில் கார்ட்டூன் மூலம் நற்செய்திகள் பிரசுரிக்கப்படுகின்றன.





- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் கதிர்காமப் பிரதேசத்தில் கஷ்டப் பிரதேச பாடசாலைகளை இணங்கண்டு அப்பாடசாலை மாணவர்களிடையே நல்லெண்ண மனப்பாங்குகளை விருத்தி செய்யும் நோக்கில் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியதுடன் அம்மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்கள், அகராதிகள் என்பன வழங்கப்பட்டன. அந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் இணையான வகையில் பிரதம அமைச்சர் அலுவலக ஊழியர்களின் சாதகமான மனப்பாங்கு விருத்தி மற்றும் வருடாந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 2014 ஒக்டோபர் மாதம் அர்த்தம்மிக்க வகையில் செயற்படுத்தப்பட்டது.


- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து சமூகத்தில் நல்லெண்ண மனப்பாங்குகளை எடுத்தியம்பும் நோக்கில் அசையும் கார்ட்டூன் நிகழ்ச்சித் திட்டமொன்று

- அன்றாட வாழ்வில் தெரிந்தோ தெரியாமலோ நாம் செய்யும் பிழைகள், தவறுகள், குறைகள் என்பவற்றை சீர்செய்து கொள்வதற்கு வழிகாட்டுமுகமாக ‘‘ஜீவித்தயட்ட விநாடியக்’’ எனும் நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள வர்த்தக சேவை, நெத் எப்.எம், ரன் எப்.எம் போன்ற ஒலிபரப்புச் சேவைகளில் தற்போது ஒலிபரப்பப்படுகின்றது.

- நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் இணையத்தளப் பக்கமொன்றைத் தயாரித்து அலுவலக இணையத்தளத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## நல்லெண்ண மனப்பாங்கு விருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான செலவு விபரம்

| வருடம் | மதிப்பீட்டுத் தொகை | செலவு |
|---|---|---|
| 2010 | 400,000.00 | 399,858.00 |
| 2011 | 20,330,000.00 | 20,216,513.00 |
| 2012 | 35,400,000.00 | 25,694,916.00 |
| 2013 | 30,000,000.00 | 15,694,825.66 |
| 2014.12.31 வரை | 25,000,000 | 12,300,003 |



**(ii) 2008 ஆம் ஆண்டில் இருந்து பிரதம அமைச்சர் அலுவலகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் உற்பத்தித்திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.**

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உற்பத்தித்திறன் விருது – 2009 போட்டியில் அரச பிரிவில் அமைச்சுக்களுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டு விஷேட திறமை விருதுக்கான சான்றிதழை பிரதம அமைச்சர் அலுவலகம் பெற்றுக்கொண்டதன் பின்னர் அடுத்த கட்டமாக 2014 ஆம் ஆண்டில் தங்கப் பதக்கத்தை வெற்றிகொள்ளும் நோக்கில் கீழ் குறிப்பிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1. ஆளணியில் சிந்தனை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தி அதனூடாக அலுவலக சூழல் மற்றும் வெளியார் தொடர்புகளை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டு வரும் நோக்கில் பயிற்சி வேலைத்திட்டங்களில் கலந்துகொள்ளச் செய்தல்.

2. தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தற்போது நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளை இற்றைப்படுத்துவதற்கும் வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. அலுவலகத்தில் பயிற்சிப் பட்டறைகளை நடாத்துவதன் ஊடாக தர வட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான செயன்முறை அறிவு மற்றும் வழிமுறைகள் சம்பந்தமான அறிவு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

4. சேவை விளைதிறனை விருத்தி செய்யுமுகமாக ஆளணிக்கு உற்பத்தித்திறன் பயிற்சிகளுக்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

(iii) **தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியுடன் இணையான நிகழ்ச்சித் திட்டங்கள்.**

வருடாந்தம் தேசிய சுதந்திர தினத்துடன் இணையான வகையில் நடைபெறும் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சி 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்றது. அதன் பிரகாரம் இக் கண்காட்சிக்கு பல்வேறு வகையான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலக காட்சி மண்டபத்தை நிர்மாணித்தல் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், 2014 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியை அடிப்படையாக வைத்து நல்லெண்ண மனப்பாங்குகளை விருத்தி செய்யும் நோக்கில் குருநாகல் மாவட்டத்தில் வாசிகசாலை வசதியற்ற 30 பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து வாசிகசாலையொன்றை ஆரம்பிப்பதற்காக அப்பாடசாலைகளுக்கு புத்தகங்கள் மற்றும் அலுமாரி போன்றவற்றை பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பிரதேச செயலகப் பிரிவு மற்றும் மாவட்ட மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளை நடாத்தி தேசத்திற்கு மகுடம் கண்காட்சி வைபவத்தின் போது கௌரவ தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## (iv) 2008 ஆம் ஆண்டு முதல் பிரஜைகள் - சேவை பெறுநர் பட்டயம் ஊடாக சமூக சேவைகள் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் மற்றும் சேவைகள் வழங்கலை வினைதிறன் மிக்கதாக மாற்றுதல்.

**நோக்கம்:**

- இதன் மூலம் அரச சேவைகளை வழங்கும் முறைகளின் தரத்தை தொடச்சியாக அதிகரித்தல்.
- வழங்கப்படும் சேவைகளின் தரம் சம்பந்தமாக மற்றும் அந்த தரத்திற்கேற்ப சேவைகள் வழங்கப்படாவிடின் பிரஜைகள்/சேவை பெறுநர்களினால் மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் சம்பந்தமாக இணக்கப்பாட்டிற்கு வரல்.
- செலுத்தப்படும் வரிப்பணத்திற்கேற்ப பிரஜைகளுக்கு/சேவை பெறுநர்களுக்கு சிறந்த மற்றும் வினைதிறனுடைய சேவையை வழங்குவதற்கான கடமைப்பாட்டை உறதிப்படுத்தல்.
- வழங்கப்படும் சேவைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அரச ஊழியர்களின் கடமைகளை உறுதிப்படுத்தல்.
- சட்டம்,ஒழுங்கு விதிகள் மற்றும் அவற்றை செயற்படுத்தும் முறைகள் சம்பந்தமாக சேவை பெறுநர்களிடையே தெளிவினை ஏற்படுத்தல்.
- பிரஜைகள் / சேவை பெறுநர்கள் தமது சேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் போது அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக அதளிவை ஏற்படுத்தல்.

## (v) 2008 – 2015 சார்க்(SAARC) சமூக பட்டயம் தொடர்பான செயல் திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல

- தெற்காசியாவில் வாழும் மக்களின் நலனோம்புகை மேம்பாடு மூலம் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கினைக் கொண்ட சார்க் சமூக பட்டயத்தின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தலைமையில் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவொன்றை அமைத்து, தேசிய செயல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் நோக்கங்களை நடை முறைப்படுத்துவதற்காக குறித்த நிரல் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவியுடன் இலங்கையின் செயல் திட்டத்தை செயற்படுத்துவதனை பிரதம அமைச்சர் அலுவலகம் மேற்கொள்ளும். குறித்த கால எல்லைக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய நிச்சயிக்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள், செயலாற்றுகைக் குறிகாட்டிகள் இங்கு உட்படுத்தப்படுவதுடன் அதன் முன்னேற்றம் பற்றிய ஆய்வை பிரதம அமைச்சர் அலுவலகம் மேற்கொள்ளும்.
- 2008 – 2015 நடைமுறைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட காரணங்களுள் கீழ் காணப்படும் விடயங்கள் மீது கவனம் செலுத்தப்படும்.

| | |
|---|---|
| 1. வறுமை | 2. இளைஞர்கள் |
| 3. பெண்கள் | 4. சிறுவர்கள் |
| 5. கல்வி | 6. சுகாதாரம் |
| 7. சூழல் | |

- இந்த பிரதான விடயங்களுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் சிறந்த தொடர்பினைப் பேணி செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் மீண்டும் செயல் திட்டத்தை இற்றைப்படுத்தும் ஆரம்ப கட்டம் 2014 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

## 6) கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கு வருகை தந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட விபரம்.

### i) கௌரவ பிரதம அமைச்சரை சந்திக்க வருகை தந்த இராஜதந்திரிகள் பற்றிய விபரம்

**2014.01.01 – 2014.12.31**

| திகதி | வெளிநாட்டு / உள்நாட்டுப் பிரதிநிதியின் பெயர் | நாடு |
|---|---|---|
| 2014.02.05 | ஆசிய பசுபிக் அமைப்பின் உதவிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிராந்தியப் பணிப்பாளர் திரு.யொசிதெரு உரமொட்டொ அவர்கள் | ஆசிய பசுபிக் பிராந்திய அமைப்பு |
| 2014.02.12 | ஈரான் உச்ச சபையின் தலைவரும் ஹஜ் குழுவின் தலைவருமான அதிமேதகு ஹொஜ்ஜாதுல் இஸ்லாம் காசி அஸ்கர் அவர்கள் | ஈரான் |
| 2014.02.18 | இந்தோனேஷிய தூதுவர் | இந்தோனேஷியா |
| 2014.03.06 | பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் அதிமேதகு மேஜர் ஜெனரல்(ஓய்வு பெற்ற) காசிம் குரைஷி அவர்கள் | பாகிஸ்தான் |
| 2014.03.27 | கொரியத் தூதுவர் அதிமேதகு அர்ஜுன ஜொங்மூன் சொய் அவர்களின் பிரியாவிடை வைபவம் | கொரியா |
| 2014.06.09 | கொரியத் தூதுவர் அதிமேதகு சேங் வொம் சாம் அவர்கள் | கொரியா |
| 2014.07.14 | வெனிசுவேலா நாட்டின் தூதுவர் அதிமேதகு மிலெனா சன்டானா-ராமிரெஸ் அம்மையார் | வெனிசுவேலா |
| 2014.07.28 | சுவிற்சர்லாந்து தூதுவர் அதிமேதகு தோமஸ் லிட்ச்சர் அவர்கள் | சுவிற்சர்லாந்து |
| 2014.07.30 | பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் அதிமேதகு மொஹமட் சுபியுர் ரஹ்மான் | பங்களாதேஷ் |
| 2014.08.06 | பிரியாவிடை பெற்றுச் செல்லும் வியட்னாம் தூதுவர் அதிமேதகு டொன் சிங் தன்ஹ் | வியட்னாம் |
| 2014.10.03 | வியட்னாம் தூதுவர் அதிமேதகு பான் கியூ தூ அம்மையார் | வியட்னாம் |
| 2014.11.18 | பெலரஸ் சபாநாயகர் அதிமேதகு விலடிமீர்என்ட்ரிவென்கோ அவர்களுடனான சந்திப்பு | பெலரஸ் |
| 2014.11.21 | சீன அரச சபையின் பிரதம பிரதிநிதி அதிமேதகு செங்க பெய்னென் அவர்களுடனான சந்திப்பு | சீனா |
| 2014.12.12 | சீனாவின் சர்வதேச கற்கைகளுக்கான நிறுவனத்தின் கற்கைக் குழுவின் பணிப்பாளர் யென் ஜெயிம்யன் அவர்களுடனான சந்திப்பு | சீனா |

## ii) இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள்

| திகதி | வெளிநாட்டுப் பிரதிநிதியின் பெயர் | நாடு |
|---|---|---|
| 2014.01.24 | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கௌரவ அவுஸ்திரேலிய பிரதமர் டொனி அபொட் உட்பட 14 பிரதிநிதிகளை வரவேற்றல் | அவுஸ்திரேலியா |
| 2014.03.05 | அதிமேதகு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அவர்களை விமான நிலையத்தில் வரவேற்றல் | ஆப்கானிஸ்தான் |
| 2014.05.19 | உயர் பௌத்த பிக்குவின் தலைமையிலான தாய்லாந்து பௌத்த பிரதிநிதிகளை சந்தித்தல் | தாய்லாந்து |
| 2014.07.20 | போர்த்துக்கல் நாட்டின் பிரதமர் கௌரவ பெட்ரோ பாஸ்ஸொஸ் உட்பட பிரதிநிதிகள் | போர்த்துக்கல் |
| 2014.09.07 | கியூபாவின் வெளிவிவகார அமைச்சர் அதிமேதகு புருனோ ரொட்ரிகோ பர்ரில்லா உட்பட பிரதிநிதிகள் | கியூபா |
| 2014.09.08 | ஜப்பான் பிரதமர் அதிமேதகு சின்சோ அபே மற்றும் அவரது பாரியாரை வழியனுப்பி வைத்தல் | ஜப்பான் |
| 2014.09.17 | அதிமேதகு சீன ஜனாதிபதி உட்பட பிரதிநிதிகளை சந்தித்தல் | சீனா |
| 2014.09.18 | வியட்னாம் கொம்யூனிசக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் வியட்னாம் கொம்யூனிசக் கட்சியின் வெளிவிவகார ஆணைக்குழுவின் தலைவருமான அத்மேதகு ஹோங் பின் குஆன் உட்பட தூதுக்குழுவினர் | வியட்னாம் |

## iii) கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்கள்:

| திகதி | வைபவம் | நாடு |
|---|---|---|
| 2014 மே,07 - 10 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெசாக் தின வைபவம் - 2014 , டின் விஹாரை, நின் பின் மாகாணம். | வியட்னாம் |
| 2014 ஆகஸ்ட், 09 - 13 | உலக சமாதான அமைப்பு மாநாடு – 2014 சோல் நகரம் | கொரியா |

# கௌரவ பிரதமர் கலந்து கொண்ட விசேட உள்ளூர் வைபவங்கள்

| திகதி | வைபவம் |
|---|---|
| 2014.02.05 | அமைச்சரவை உப குழு நியமனம் - அலரி மாளிகை |
| 2014.02.27 | தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சி, குளியாப்பிட்டிய - 2014 , நிறைவு வைபவம் |
| 2014.03.07 | மாத்தளை கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளல் |
| 2014.04.05 | ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிங்கள – தமிழ் புத்தாண்டு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளல். |
| 2014.04.26 | நீர்கொழும்பு, '' கோல்ட் சேன்ட்ஸ்'' ஹோட்டலில் நடைபெற்ற 8 ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய முன்னணித் தலைவர்கள் மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளல். |
| 2014.05.02 | தேசிய வீரர்கள் கொடிகள் வழங்கும் விழா |
| 2014.05.03 | ''ஜய பிரித் பின்கம – 2014'' – பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபம் |
| 2014.05.22 | கம்பஹா ஸ்ரீ சுதர்சன தர்ம நகாயதனவில் சங்கைக்குரிய ஹேமாலோக தேரரை சந்தித்து திரிபீடகம் சம்பந்தமான கலந்துரையாடியமை |
| 2014.05.25 | அமரபுர நிகாயவின் சங்கைக்குரிய பின்னவல சாசனகீர்த்தி தேரரின் சங்கநாயக்க பதவி வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொணடமை. |
| 2014.06.27 | பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வோதய அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மெத்தா மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளல் |
| 2014.07.06 | ரொட்டும்ப பெத்மகா விஹாரையின் தலைமைப் பதவிக்கான அக்த பத்திரம் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளல். |
| 2014.07.14 | ''பிரதமர் கிண்ணம்'' பாடசாலைகளுக்கிடையிலான ரக்பி போட்டி - 2014 |
| 2014.07.15 | சீன தூதுவராலயத்தினால் நடாத்தப்பட்ட 21 ஆம் நூற்றாண்டின் கடல் பட்டு மார்க்கம் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளல் |
| 2014.09.19 | BCIS இல் நடைபெற்ற தியான்ஜின் ஞாபகார்த்த சீனக் கண்காட்சியின் ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளல். |
| 2014.09.19 | 8 ஆவது ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டு பொதுச் சபையின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொள்ளல். |
| 2014.09.20 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டின் நிறைவு வைபவத்தில் உரையாற்றல் |
| 2014.10.01 | உலக சிறுவர் தினம் - 2014 வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளல் |
| 2014.10.13 | BMICH இல் நடைபெற்ற தரக் கட்டுப்பாட்டு வட்டம் சம்பந்தமான சர்வதேச மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளல். |

## 7) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு மாநாடுகள்/ கருத்தரங்குகள்/ செயலமர்வுகள்/ புலமைப்பரிசில்கள் என்பவற்றிற்காக நாட்டில் இருந்து வெளியே செல்வதற்கான அனுமதியை வழங்கல்

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்லும்போது நாட்டை விட்டு வெளியேறுவதற்காக அ.நி.சு.21/2007 இன் பிரகாரம் கௌரவ பிரதம அமைச்சரின் அனுமதியைப் பெறல் வேண்டும்.

- 2014.01.01 - 2014.12.31 வரை **7002** உத்தியோகத்தர்களுக்கு நாட்டில் இருந்து வெளியே செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- இது சம்பந்தமாக வெளியிடப்பட்டிருக்கும் அ.நி.சுற்றறிக்கைகள் மற்றும் ஜனாதிபதி செயலகத்தினால் இடைக்கிடை வெளியிடப்படும் அறிவுரைகளின்படி இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரச நிறுவனங்களுக்கு பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் இடைக்கிடை அறிவுரை வழங்கப்படுகின்றது. அத்துடன், தகவல்களை முன்வைக்கும் படிவங்களை முறையாகத் தயாரித்து தாமதமின்றி இந்த அலுவல்களை உத்தியோகத்தர்களுக்கு நிறைவேற்றிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்ப முறையினைக் கையாண்டு விண்ணப்பங்களை முன்வைக்கவும், அனுமதி வழங்கவும் எதிர்பார்ப்பதுடன், அந்நடவடிக்கைகளை கணனி வலையமைப்பின் ஊடாக நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறைகள் பற்றிய சாராம்சம்
# (01.01.2014 – 31.12.2014)

| இலக்கம் | அமைச்சு | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உயர் கல்வி அமைச்சு | 2580 |
| 2 | மின்சக்தி மற்றும் சக்திவள அமைச்சு | 619 |
| 3 | தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 315 |
| 4 | சுற்றாடல் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு | 286 |
| 5 | விவசாய அமைச்சு | 304 |
| 6 | சுகாதார அமைச்சு | 269 |
| 7 | நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு | 203 |
| 8 | போக்குவரத்து அமைச்சு | 95 |
| 9 | நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு | 28 |
| 10 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு | 140 |
| 11 | கல்வி அமைச்சு | 123 |
| 12 | மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு | 120 |
| 13 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 143 |
| 14 | சிவில் விமான சேவைகள் அமைச்சு | 127 |
| 15 | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 214 |
| 16 | இளைஞர் விவகார மற்றும் திறனபிவிருத்தி அமைச்சு | 252 |
| 17 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 120 |
| 18 | கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 52 |
| 19 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சு | 82 |
| 20 | தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு | 34 |
| 21 | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 64 |
| 22 | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு | 29 |
| 23 | வெளிவிவகார அமைச்சு | 50 |
| 24 | நீதி அமைச்சு | 46 |
| 25 | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 58 |
| 26 | நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு | 35 |
| 27 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 32 |
| 28 | தொழில் அமைச்சு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 24 |
| 29 | வனவிலங்குகள் அமைச்சு | 16 |
| 30 | தபால் சேவைகள் அமைச்சு | 24 |
| 31 | சீனிக் கைத்தொழில் அமைச்சு | 10 |
| 32 | கல்வி சேவைகள் அமைச்சு | 07 |
| 33 | முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | 58 |
| 34 | வியைாட்டுத்துறை அமைச்சு | 34 |
| 35 | வெகுசன ஊடகம், தகவல் அமைச்சு | 19 |
| 36 | பெற்றோலிய வளக் கைத்தொழில் அமைச்சு | 06 |
| 37 | பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு வர்த்தக அபிவிருத்தி அமைச்சு | 24 |
| 38 | புத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சு | 14 |

| | | |
|---|---|---|
| 39 | தேசிய உரிமங்கள் பற்றிய அமைச்சு | 19 |
| 40 | கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு | 10 |
| 41 | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 25 |
| 42 | சுதேச வைத்திய அமைச்சு | 19 |
| 43 | சமூக சேவைகள் அமைச்சு | 31 |
| 44 | தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு | 13 |
| 45 | தெங்கு அபிவிருத்தி மற்றும் அரச பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 15 |
| 46 | உற்பத்தித்திறன் அபிவிருத்தி அமைச்சு | 17 |
| 47 | அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | 03 |
| 48 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு | 04 |
| 49 | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 30 |
| 50 | மீள்குடியேற்ற அமைச்சு | 05 |
| 51 | அரச வளங்கள் அமைச்சு | 55 |
| 52 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 01 |
| 53 | சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 0 |
| 54 | தாவரவியல்,பொது பொழுதுபோக்கு அமைச்சு | 20 |
| 55 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 07 |
| 56 | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் | 28 |
| 57 | இலங்கை பாராளுமன்றம் | 44 |
| | **மொத்த எண்ணிக்கை** | **7002** |

## 8) அமைச்சரவை நிருபம், பாராளுமன்ற அறிக்கை மற்றும் சட்ட மூலங்கள் தயாரித்தலும் முன்வைத்தலும் மற்றும் பாராளுமன்ற கேள்விகளுக்கு பதில் அளித்தல்

- ❖ பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட சட்ட மூலங்கள் உட்பட ஏனைய தாபனங்கள் சார்பாக கௌரவ, பிரதம அமைச்சர் அவர்கள் முன்வைத்த அமைச்சரவை நிருபங்கள் மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் நேரடியாக முன்வைத்த அமைச்சரவை நிருபங்கள் அமைச்சரவையின் செயலாளருக்கு அனுப்பப்படும்.

- ❖ இந்த நடவடிக்கையின் போது குறித்த நிருபம் மற்றும் இணைப்புக்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிப்பதும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் குறித்த அலுவலகத்திற்கு தெரிவிப்பதுடன் பின்னூட்டல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

- ❖ கௌரவ பிரதம அமைச்சர் ஊடாக பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படும் அறிக்கைகள்,சட்ட மூலங்கள் என்பன பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும். இங்கு சட்ட மூலங்கள் தயாரித்தல் திணைக்களம், சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

- ❖ இதற்கு மேலாக அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கீழ் இருக்கின்ற மற்றும் பிரதம அமைச்சரின் அலுவலகத்துடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கும் நடவடிக்கையையும் பிரதம அமைச்சரின் அலுவலகம் மேற்கொள்கின்றது. அத்துடன் தேசிய ரீதியாக கேட்கப்படும் கேள்விகள் மற்றும் சபை ஒத்திவைக்கப்படும் போது கேட்கப்படும் கேள்விகள் சம்பந்தமாக பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் இணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 9) தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு மேம்பாடு

பிரதம அமைச்சர் அலுவலகம் **இ - அரச** கொள்கைக்கு உட்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் படி கீழ் காணப்படும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. தகவல் தொழில்நுட்ப அலகை நிறுவுதல் மற்றும் நவீனமயப்படுத்தும் உத்தியோகத்தர்களை நியமித்தல்
2. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் இணையத்தளத்தினை மேலும் அபிவிருத்தி செய்தல்
3. கணனி மென்பொருள் பாதுகாப்புத் தொகுதியை நிறுவுதல்
4. களஞ்சியம், போக்குவரத்து, கொள்வனவு, உத்தியோகத்தர்களின் வரவு/வெளிச்செல்லல், அந்தரங்கக் கோவை, நிலையான சொத்து போன்ற விடயங்களுக்காக கணனித்தொழில்நுட்பத்தை பிரயோகித்தல்.
5. பதவியணியினரின் செயன்முறை பயிற்சித் தேவையை கண்டறிதலும் தேவையான பயிற்சியை வழங்கலும்
6. நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப செயன்முறை திட்டத்தினை தயாரித்தலும் அதன் படி நடைமுறைப்படுத்தலும்
7. தலைமை நவீனமயப்படுத்தும் உத்தியோகத்தர்களுககுத் தேவையான பயிற்சியை வழங்கல்
8. சகல உத்தியோகத்தர்களுக்கும் கணனி வசதியை வழங்கல்
9. அரச தகவல் வலையமைப்பில் நிறுவனத்தின் சேவை வழங்கல் விபரத்தை உட்படுத்தல்
10. சகல மென்பொருள்,வன்பொருள் மற்றும் இணையத்தளம் சம்பந்தமான நடவடிக்கைகளின் போது வெளியாரை ஈடுபடுத்தும் போது அதற்காக குறித்த ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு அவற்றை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல்

- இதற்கு மேலாக நிறுவனத்தின் உள்ளக நிருவாக நடவடிக்கைகளுக்காக மென் மேலும் கணனித் தொழில்நுட்பத்தை பிரயோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- அலுவலகத்தின் சகல கணனிகள் மற்றும் கணனிப் பாகங்களுக்கு முறையாக இலக்கமிடப்பட்டுள்ளது.
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒலிபரப்புப் பிரிவை ஊடக செயலாளரின் கண்காணிப்பின் கீழ் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

## 10) புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் மற்றும் அதன் கூரையில் சூரிய கலத் தொகுதியை அமைத்து சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்

1. 57,647,100.00 ரூபா செலவில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வாகனத் தரிப்பிடத்துடன்கூடிய புதிய கட்டிடத்தை அலுவலகத் தேவைக்காகப் பயன்படுத்தல்.

2. சக்திவலுப் பாதுகாப்பிற்கான ஒரு நடவடிக்கையாக 17 KWP கொள்ளளவைக்கொண்ட சூரியகல மின் உற்பத்தித் தொகுதியொன்றை அமைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்து அலுவலகத்திற்கான மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்தல்.

## 11) மனித வள அபிவிருத்தி

2014 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சர் அலுவலக உத்தியோகத்தர்கள் 07 பேருக்கு வெளிநாட்டுப் பயிற்சியும் 18 உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டில் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளன. உள்நாட்டுப் பயற்சிகள் பிரதானமாக கீழ் குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளன.

1. ஆங்கில மொழியை விருத்தி செய்தல்
2. கணனி தொழில் நுட்ப அறிவை விருத்தி செய்தல்
3. முகாமைத்துவ விடய அறிவை விருத்தி செய்தல்

இதற்கு மேலாக அலுவலக ஊழியர்களின் ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் அரச சேவைப் பயிற்சி நிறுவனத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட ஆசிரியர் ஒருவரினால் ஆங்கில மொழி வகுப்பு நடாத்தப்பட்டது.

- ❖ அத்துடன் வருடத்திற்கொருமுறை பயிற்சி நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட களப் பயிற்சி சுற்றுப்பயணம் ஒன்று ஏற்பாடு செய்யப்படுவதுடன், அங்கு பல்வேறு செயன்முறைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் பதவியணியினரின் ஆற்றல்களை விருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வருடம் இந்தக் களப் பயிற்சிச் சுற்றுப்பயணம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நல்லெண்ண மனப்பாங்குகள் விருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் உட்படுத்திய வகையில் இடம்பெற்றது.

# 12.) EXPENDITURE REPORT - 2014 01.01- 2014.12.31

Head - 2 Program 1 - Civil Administration Project 1 - Office of the Prime Minister

| Object Code | Category | Estimate-2014 Revise | Supplemen. Allocation | F.R.66 Transfers | Total Estimate | Total Exp upto Dec | Balance |
|---|---|---|---|---|---|---|---|
| 1001 | Salaries and Wages | 12,000,000.00 | | (505,000.00) | 11,495,000.00 | 11,486,675.18 | 8,324.82 |
| 1002 | Overtime and Holiday Pay | 4,750,000.00 | | | 4,750,000.00 | 4,749,652.04 | 347.96 |
| 1003 | Other Allowances | 11,400,000.00 | | 107,500.00 | 11,507,500.00 | 11,507,479.15 | 20.85 |
| | | 28,150,000.00 | | (397,500.00) | 27,752,500.00 | 27,743,806.37 | 8,693.63 |
| 1101 | Domestic | 1,200,000.00 | | 375,300.00 | 1,575,300.00 | 1,575,275.92 | 24.08 |
| 1102 | Foreign | 3,500,000.00 | | (137,200.00) | 3,362,800.00 | 3,355,749.06 | 7,050.94 |
| | Supplies | | | | - | | |
| 1201 | Stationery and Office Requisites | 3,000,000.00 | 1,610,000.00 | | 4,610,000.00 | 4,602,080.50 | 7,919.50 |
| 1202 | Fuel | 12,500,000.00 | | (1,433,200.00) | 11,066,800.00 | 11,066,755.92 | 44.08 |
| 1203 | Uniforms | 200,000.00 | | (81,000.00) | 119,000.00 | 114,500.00 | 4,500.00 |
| | Maintenance Expenditure | | | | - | | |
| 1301 | Vehicles | 13,500,000.00 | 3,500,000.00 | 566,500.00 | 17,566,500.00 | 17,566,459.02 | 40.98 |
| 1302 | Plant, Machinery and Equipment | 400,000.00 | | | 400,000.00 | 395,906.52 | 4,093.48 |
| 1303 | Buildings | 1,000,000.00 | | (356,000.00) | 644,000.00 | 643,954.95 | 45.05 |
| | Contractual Services | | | | | | |
| 1401 | Transport | 550,000.00 | | 113,221.00 | 663,221.00 | 663,220.08 | 0.92 |
| 1402 | Postal and Communication | 4,500,000.00 | | (187,000.00) | 4,313,000.00 | 4,312,628.78 | 371.22 |
| 1403 | Electricity & water | 7,250,000.00 | | (577,900.00) | 6,672,100.00 | 6,672,053.79 | 46.21 |
| 1404 | Rents & Local Taxes | 200,000.00 | | (118,500.00) | 81,500.00 | 81,459.76 | 40.24 |
| 1405(1) | Entertainments & Gifts | 18,600,000.00 | 2,000,000.00 | 2,997,835.00 | 23,597,835.00 | 23,597,831.72 | 3.28 |
| 1405(2) | Other | 12,243,785.00 | | 1,138,305.00 | 13,382,090.00 | 13,382,086.84 | 3.16 |
| 1405(3) | Dep.of National Botanic Gradens | 4,156,215.00 | | | 4,156,215.00 | 4,155,341.19 | 873.81 |
| | | 82,800,000.00 | 7,110,000.00 | 2,300,361.00 | 92,210,361.00 | 92,185,304.05 | 25,056.95 |
| | Recurrent Total | 110,950,000.00 | 7,110,000.00 | 1,902,861.00 | 119,962,861.00 | 119,929,110.42 | 33,750.58 |
| | Rehabilitation and Improvement of Capital Assets | | | | | | |
| 2001 | Buildings & Structures | 4,250,000.00 | | | 4,250,000.00 | 4,129,453.47 | 120,546.53 |
| 2002 | Plant, Machinery and Equipment | 300,000.00 | | | 300,000.00 | 123,750.00 | 176,250.00 |
| 2003 | Vehicles | 700,000.00 | | | 700,000.00 | 55,000.00 | 645,000.00 |
| | Acquisition of Capital Assets | | | | | | |
| 2101 | Vehicles | | | | - | - | - |
| 2102 | Furniture and Office Equipment | 2,500,000.00 | | (540,823.00) | 1,959,177.00 | 1,959,035.40 | 141.60 |
| 2103 | Plant, Machinery and Equipment | 800,000.00 | | | 800,000.00 | 579,000.00 | 221,000.00 |
| | Capital Total | 8,550,000.00 | - | (540,823.00) | 8,009,177.00 | 6,846,238.87 | 1,162,938.13 |
| | Total | 119,500,000.00 | 7,110,000.00 | 1,362,038.00 | 127,972,038.00 | 126,775,349.29 | 1,196,688.71 |

# EXPENDITURE REPORT - 2014 01.01- 2014.12.31

Head - 2 Program 1 - Civil Administration Project 2 - General Administration & Establishment

| Code | Category | Estimate-2014 | Supplemen. Allocation | F.R.66 Transfer | Total Estimate | Total Exp upto Dec | Balance |
|---|---|---|---|---|---|---|---|
| 1001 | Salaries and Wages | 30,000,000.00 | | (1,993,806.00) | 28,006,194.00 | 27,801,138.31 | 205,055.69 |
| 1002 | Overtime and Holiday Pay | 9,500,000.00 | | (183,735.00) | 9,316,265.00 | 9,316,220.82 | 44.18 |
| 1003 | Other Allowances | 28,000,000.00 | | 37,735.00 | 28,037,735.00 | 28,037,734.73 | 0.27 |
| | | 67,500,000.00 | - | (2,139,806.00) | 65,360,194.00 | 65,155,093.86 | 205,100.14 |
| 1101 | Domestic | 2,800,000.00 | | 36,500.00 | 2,836,500.00 | 2,836,111.04 | 388.96 |
| 1102 | Foreign | 1,000,000.00 | | (708,200.00) | 291,800.00 | 291,618.39 | 181.61 |
| 1201 | Stationery and Office Requisites | 3,000,000.00 | 990,000.00 | | 3,990,000.00 | 3,989,249.95 | 750.05 |
| 1202 | Fuel | 12,500,000.00 | | 971,500.00 | 13,471,500.00 | 13,471,414.48 | 85.52 |
| 1203 | Uniforms | 400,000.00 | | (108,000.00) | 292,000.00 | 292,000.00 | - |
| 1301 | Vehicles | 9,250,000.00 | 3,990,000.00 | | 13,240,000.00 | 13,231,489.36 | 8,510.64 |
| 1302 | Plant, Machinery and Equipment | 13,950,000.00 | 15,200,000.00 | 3,247,880.00 | 32,397,880.00 | 32,397,879.50 | 0.50 |
| 1303 | Buildings | 400,000.00 | | (331,921.00) | 68,079.00 | 67,997.38 | 81.62 |
| 1401 | Transport | 600,000.00 | | 43,000.00 | 643,000.00 | 642,950.00 | 50.00 |
| 1402 | Postal & commiunication | 2,800,000.00 | | (1,066,800.00) | 1,733,200.00 | 1,725,581.64 | 7,618.36 |
| 1403 | Electricity & water | 9,000,000.00 | | (1,436,700.00) | 7,563,300.00 | 7,563,236.08 | 63.92 |
| 1404 | Rents & Local Taxes | 750,000.00 | | (127,736.00) | 622,264.00 | 622,220.00 | 44.00 |
| 1405 | Other | 5,000,000.00 | | (397,735.00) | 4,602,265.00 | 4,585,325.38 | 16,939.62 |
| 1506 | Property Loan Interest | 1,500,000.00 | | 76,321.00 | 1,576,321.00 | 1,576,320.88 | 0.12 |
| 1701 | | | 672,800.00 | 38,836.00 | 711,636.00 | 711,635.27 | 0.73 |
| | | 62,950,000.00 | 20,852,800.00 | 236,945.00 | 84,039,745.00 | 84,005,029.35 | 34,715.65 |
| | Recurrent Total | 130,450,000.00 | 20,852,800.00 | (1,902,861.00) | 149,399,939.00 | 149,160,123.21 | 239,815.79 |
| 2001 | Buildings and Structures | 3,000,000.00 | | | 3,000,000.00 | 2,842,992.36 | 157,007.64 |
| 2002 | Plant, Machinery and Equipment | 400,000.00 | | | 400,000.00 | 246,883.10 | 153,116.90 |
| 2003 | Vehicles | 400,000.00 | | | 400,000.00 | - | 400,000.00 |
| 2101 | Vehicles | 155,000.00 | | | 155,000.00 | 154,100.00 | 900.00 |
| 2102 | Furniture and Office Equipment | 1,000,000.00 | | 3,498,522.00 | 4,498,522.00 | 4,498,521.35 | 0.65 |
| 2103 | Plant, Machinery and Equipment | 800,000.00 | | (657,699.00) | 142,301.00 | 107,951.40 | 34,349.60 |
| 2104 | Building | 25,700,000.00 | | (2,300,000.00) | 23,400,000.00 | 17,775,125.39 | 5,624,874.61 |
| Nov-06 | Developing Positive Attitudes | 25,000,000.00 | | | 25,000,000.00 | 18,925,240.83 | 6,074,759.17 |
| 2401 | Tranning & Capacity Building | 900,000.00 | | | 900,000.00 | 899,114.00 | 886.00 |
| | Capital Total | 57,355,000.00 | - | 143,088.00 | 57,895,823.00 | 45,449,928.43 | 12,445,894.57 |
| | | 187,805,000.00 | 20,852,800.00 | (1,362,038.00) | 207,295,762.00 | 194,610,051.64 | 12,685,710.36 |

# செயல் திட்டம் – 2015
# பிரதம அமைச்சர் அலுவலகம்

| o | பிரதான துறைகள் Thrust Area | செயற்பாடுகள் Activity | ஒதுக்கிய நிதி Allocation (Rs.Mn.) | பொறுப்பு Responsibility | கால எல்லை Duration -1 | -2 | -3 | -4 | எதிர்பார்க்கும் பெறுபேறுகள் Output |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு | புதியதொரு இணையத்தளமொன்றை ஆரம்பித்து இற்றைப்படுத்திப் பேணிவரல் | N/A | Addl.Sec./ AD (P) | ━━ | ━━ | ━━ | ━━ | இற்றைப்படுத்தப்படும் புதிய இணையத்தளமொன்றை நிறுவுதல் |
| | | இ-அரச கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொடர்பாடல் மற்றும் இணையத்தள வசதிகளை மேம்படுத்தல் | N/A | Addl.Sec./ AD (P) | ━━ | ━━ | | | அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் சேவைகளை வினைத்திறன்மிக்க வகையில் மேற்கொள்ளல் |
| 2 | மனித வளம் மற்றும் தாபன அலுவல்கள் மேம்பாடு | உத்தியோகத்தர்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் (Staff Training) | 1.0 | SAS(D)/ AS | ━━ | ━━ | ━━ | ━━ | அலுவலகம் பயிற்சி பெற்ற ஆளணியைக் கொண்டிருத்தல் |
| | | நிர்வாக மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் அலுவலக முறைமைகளை மறுசீரமைத்தல் | N/A | SAS(A)/ AS | ━━ | ━━ | | | முறையான அலுவலக முறைமைகள் செயற்படுத்தப்படல் |
| | | பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உற்பத்தித்திறன் விருத்திக்குத் தேவையான திட்டங்களைச் செயற்படுத்தல் | N/A | SAS /AS | ━━ | ━━ | ━━ | ━━ | அலுவலகத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் |
| | | அலுவலக வளவின் பூங்காவை முன்மாதிரி வீட்டுத்தோட்டப் பூங்காவாக அபிவிருத்தி செய்து பேணிவரல் | N/A | SAS/AS | ━━ | ━━ | | | அபிவிருத்தி செய்யப்பட்ட முன்மாதிரி வீட்டுத்தோட்டப் பூங்கா |
| | | **கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள், வாகனங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் (2015 ஆம் ஆண்டிற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்)** | | | | | | | |
| | | கட்டிடப் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் மேம்பாடு | 4.0 | SAS/AS | ━━ | ━━ | ━━ | ━━ | சிறப்பாக பராமரிக்கப்படும் அலுவலகக் கட்டிடங்கள் |
| | | இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 0.5 | SAS/AS | ━━ | ━━ | ━━ | ━━ | சிறப்பாக பராமரிக்கப்படும் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் |
| | | வாகனங்கள் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் மேம்பாடு | 0. | SA | ━━ | ━━ | ━━ | ━━ | சிறப்பாக பராமரிக்கப்படும் வாகனங்கள் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | S/AS | | | | | |
| 3 | முறையான நிதி முகாமை | வருடாந்த நிதி ஏற்பாடுகளை அரச நிதிச் சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்று நிருபங்களுக்கு ஏற்ப பயன்படுத்தியதை உறுதிப்படுத்துமுகமாக ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயாரித்து கணக்காய்வாளர் நாயகம் / திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | N/A | CA / Acc. | — | | | | சரியாக தயாரிக்கப்பட்ட கணக்கு அறிக்கைகள் |
| | | 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டைத் தயாரித்து திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | N/A | CA / Acc. | | | | — | அலுவலக நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளல் |
| | | **மரத் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் கட்டிடங்களைப் பெற்றுக்கொள்ளல் (2015 ஆம் ஆண்டிற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்)** | | | | | | | |
| 4 | பெறுகை நடவடிக்கைகள் | அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்தல் | 1.2 | CA / Acc. | — | — | | | புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் |
| | | இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 01 | CA / Acc. | — | — | | | புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் |
| | | அலுவலகத்திற்குத் தேவையான கட்டிட வசதிகளை பெற்றுக்கொள்ளல் | 0.5 | CA / Acc. | — | — | | | புதிய அலவலகக் கட்டிடங்கள் |
| | | **அலரி மாளிகை வளவில் காணப்படும் பூரணப்படுத்தப்படாத கட்டிடங்களின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல்** | | | | | | | |
| | | கூட்ட மண்டபம் (MAGA நிறுவனம், மதிப்பீட்டுத் தொகை 350.0 மில் ரூபா, முன்னேற்றம் - 30%) | | CA / Acc. | — | — | — | — | நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட கூட்ட மண்டபம் |
| | | கட்டிட இல. 01(MAGA நிறுவனம், முன்னேற்றம் - 30%) | | CA / Acc. | — | — | — | — | நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம் |
| | | கட்டிட இல. 02 ( ஊழியப் பங்களிப்பு இலங்கை கடற்படை, மூலப்பொருட்களுக்காக மதிப்பீட்டுத் தொகை 72.0 மில் ரூபா, தற்போது வழங்கப்பட்டுள்ள மூலப்பொருட்களின் பெறுமதி 24.0 மில்.ரூபா) | | CA / Acc. | — | — | — | — | நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம் |
| | | 2016 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல் | | CA / Acc. | | | | — | 2016 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல். | N/A | CIA | | | | | தாபன ரீதியான மற்றும் பெறுகை நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்பட்டிருப்பதனை உறுதி செய்தல் |
| | | காலாண்டு ரீதியான உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | N/A | CIA | | | | | தாபன ரீதியான மற்றும் பெறுகை நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்பட்டிருப்பதனை உறுதி செய்தல் |
| | | கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளித்தல் | N/A | CIA | | | | | தாபன ரீதியான மற்றும் பெறுகை நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்பட்டிருப்பதனை உறுதி செய்தல் |
| | | 2016 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல் | N/A | CIA | | | | | 2016 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டம் |
| 6 | வசதிகளை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் | "துறைமுக நகர் அபிவிருத்தி" திட்டத்தின் மதிப்பீட்டுக் குழுவின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் | N/A | Addl.Sec. | | | | | மதிப்பீட்டு நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படல் |
| | | மத்திய வங்கி பிணைப்பத்திரங்களை வெளியிடுதல் சம்பந்தமான கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் | N/A | SAS/ AS | | | | | கண்காணிப்புக் குழுவின்நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படல் |
| | | பொருளாதார அலுவல்கள் சம்பந்தமான அமைச்சரவை உப குழுவின் நடவடிக்கைகளை ஒரங்கிணைத்தல் | N/A | | | | | | உப குழுவின் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படல் |
| | | அரசியலமைப்பு சபை சம்பந்தமான அமைச்சரவை உப குழுவின் நடவடிக்கைகளை ஒரங்கிணைத்தல் | N/A | | | | | | உப குழுவின் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படல் |
| | | பெறுகை நடவடிக்கைகள் சம்பந்தமான அமைச்சரவை உப குழுவின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் | N/A | | | | | | உப குழுவின் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படல் |
| | | ஊழல் மோசடி விசாரணைப் பிரிவின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல். | N/A | | | | | | குழுவின் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படல் |
| | | அரச உத்தியோகத்தர்களின் அலவல்கள் மற்றும் ஏனைய வெளிநாட்டுப் பயணங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொடுத்தல் தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளல் | N/A | SAS (D) AS | | | | | உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் சம்பந்தமான தகவல்கள் இற்றைப்படுத்தப்படல் |
| | | பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் பொது மக்களின் முறைப்பாடுகள், குறைகள் மற்றும் மனுக்கள் தொடர்பான அலுவல்களை ஒருங்கிணைத்தல் | N/A | SAS (D) | | | | | பொது மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படல் |
| | | பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் | N/ | Ad | | | | | தேசிய / சமய வைபவங்களை |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேசிய / சமய வைபவங்கள், கூட்டங்கள் மற்றும் சமூக உபசரணை சேவைகளுடன் தொடர்பான அலுவல்கள் | A | dl.Sec./ AD (P) | | | | | முறையான வகையில் எற்பாடு செய்யப்படல் |
| 7 | செயல் திட்டத்துடன் தொடர்பான செயற்பாடுகளின் முன்னேற்றம், பின்னூட்டல் மற்றும் மதிப்பீடு | பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வேலைத் திட்டத்திற்கமைய அந்த அலுவல்களின் கட்டுப்பாடு மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகள் | N/ A | Ad dl.Sec./ AD (P) | — | — | — | — | வேலைத் திட்டத்திற்கமைய அலுவல்கள் பூர்த்தி செய்யப்படல் |
| | | SAARC சமூக பட்டயத்தின் செயல் திட்டத்துடன் தொடர்பான அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்டுப்பாடு மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகள் | N/ A | Ad dl.Sec./ AD (P) | — | — | — | — | SAARC சமூக பட்டயத்தின் செயல் திட்டத்திற்கமைய அலுவல்கள் நிறைவேற்றப்படல் |
| | | 2016 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தைத் தயாரித்தல் | N/ A | Ad dl.Sec./ AD (P) | | | | — | 2016 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் |
| 8 | அமைச்சரவை நிருபங்கள் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் | பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் செயற்படுத்த வேண்டிய அமைச்சரவைத் தீர்மானங்களுடன் தொடர்பான நடவடிக்கைகளை ஒரங்கிணைத்தல் | N/ A | SAS /AS | — | — | — | — | குறிப்பிட்ட அமைச்சரவைத் தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல். |
| | | கௌரவ பிரதம அமைச்சர் ஊடாக முன்வைக்கப்படும் அமைச்சரவை நிருபங்களை தயாரித்து அமைச்சரவைக்கு முன்வைத்தல் | N/ A | SAS /AS | — | — | — | — | அமைச்சரவை நிருபங்களை உரிய நேரத்தில் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு இயலுமாக இருத்தல் |
| | | கௌரவ பிரதம அமைச்சர் பாராளுமன்றத்தில் வாய்மூலம் பதிலளிக்க வேண்டிய வினாக்களுக்கு பதில் தயாரித்தல் | N/ A | SAS /AS | — | — | — | — | பாராளுமன்ற வாய்மூல வினாக்களுக்கு பதிலளிக்க இயலுமாக இருத்தல் |
| 9 | வெளிநாடுகளுடனான தொடர்புகளை பேணி வருவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் | கௌரவ பிரதம அமைச்சருக்கு வெளிநாட்டுத் தூதுக் குழுக்கள், வெளிநாட்டுத் தூதுவர் சேவை உத்தியோகத்தர்களுடன் தொடர்புகளை பேணி வருவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். | N/ A | For eign Ministry | — | — | — | — | வெளிநாட்டுத் தூதுக் குழுக்கள், வெளிநாட்டுத் தூதுவர் சேவை உத்தியோகத்தர்களுடன் தொடர்புகளை பேணி வருவதற்கு இயலுமாக இருத்தல் |
| | | கௌரவ பிரதம அமைச்சரின் வெளிநாட்டுப் பயணங்களுடன் தொடர்பான அலுவல்களை ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்தல் | N/ A | | — | — | — | — | வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தேவையான வசதிகள் உரிய முறையில் கிடைத்தல் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | கௌரவ பிரதமரின் உத்தியோகபூர்வ வைபவங்களுக்கு ஊடக வசதிகளை வழங்குதல் | கௌரவ பிரதம அமைச்சர் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் அரச / தேசிய வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின்போது ஊடக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் | N/ A | Me dia | | | | | பொருத்தமான வகையில் ஊடக வசதிகள் கிடைத்தல் |
| | | கௌரவ பிரதம அமைச்சர், பிரதம அமைச்சர் அலுவலகம் தொடர்பாக தினசரி செய்திப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் கடிதங்களுக்கு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளல் | N/ A | | | | | | செய்திப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் கடிதங்களுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாக இருத்தல் |